விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 193 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 16 திங்கட்கிழமை (30.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.மாநகர வாகனங்களை மறித்து கல்லுண்டாய் மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களை மறித்து கல்லுண்டாய் பகுதி மக்களும் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்களும் இணைந்து நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு அபிவிருத்தி தொடர்பில் உலக வங்கியுடன் கலந்துரையாடல்



02ஆம் பக்கம் பார்க்க

### நீதி அமைச்சின்
## மேலதிக செயலாளராக மதுமதி நியமனம்




(கொழும்பு)

நீதி அமைச்சின் மேலதிக செயலாளராக யாழ்ப்பாணம் - உரும்பிராயைச் சேர்ந்த திருமதி மதுமதி வசந்தகுமார் நியமிக்கப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி மனிதப் புதைகுழி
# சிறுவர்களின் எலும்புக்கூடுகளுடன் புத்தகப்பை, வளையல் மீட்பு
### நேற்றைய அகழ்வில் அதிர்ச்சி



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டவை இராணுவத்தினரது எலும்புக் கூடுகள் என தென்னிலங்கையில் பேரினவாதிகளின் பிரசாரம் நடந்து கொண்டிருக்கையில் நேற்றைய அகழ்வின்போது சிறுவர்களின் எலும்புக்கூட்டுத் தொகுதிகள், யுனிசெப் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப்பை, துணி, கண்ணாடி வளையல் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

### நாகர்கோவிலில்
## படகு கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு

(நாகர்கோவில்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்பகுதியில் நேற்று அதிகாலை (29) படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மீனவரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் நீதி நிலைநாட்டப்படும்
### அநுர அரசு உறுதி



(கொழும்பு)

"இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயத்தில் உண்மை வெளிக்கொணரப்பட்டு நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்" என 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் மண் பரிசோதனை யாழ்ப்பாணம் வந்த விசேட குழு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மண் மாதிரிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் பிரத்தியேகக் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

மனிதப் புதைகுழி அமைந்திருக்கும் இடத்தில் மண் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக சட்ட மருத்துவ அதிகாரிகளால் விண்ணப்பம் 02ஆம் பக்கம் பார்க்க

## இளைஞனின் உயிரை பறித்த போதைவஸ்து


(சுன்னாகம்)

போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையான இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்தவராவார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான குறித்த இளைஞன் கடந்த 5 15ஆம் பக்கம் பார்க்க

## ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில் கைது!
### தடுக்க மகாநாயக்கரின் உதவியை நாடும் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி 15ஆம் பக்கம் பார்க்க

### அத்துமீறிய மீன்பிடி
## எட்டு இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

(தலைமன்னார்)

தலைமன்னாரை அண்மித்த இலங்கை கடற்பகுதியில், சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 8 இந்திய கடற்தொழிலாளர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, படகொன் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கிட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

## வல்வெட்டித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் ஆணொருவரின் சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றில் துர்நாற்றம் வீசுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்ட சோதனையிலேயே குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தெல்லிலுவை வல்வெட்டித்துறை மத்தியைச் சேர்ந்த வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்(வயது-60) என இனங்காணப்பட்டுள்ளது.

பிரஸ்தாபநபர் தனிமையில் வசித்துவந்த நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளின் பின் சடலத்தை பிரேத பரிசோதனைக் குட்படுத்தி அறிக்கை பெறுக் கொள்ளுமாறு பொலிஸாருக்குபணிப்புரை விடுத்தார். (ந-7,60)

# தன்பாலின திருமணம் இலங்கையில் குற்றமே

## நீதியமைச்சர் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

தன்பாலின உறவுகளைக் குற்றமற்றதாக அறிவிக்கும் யோசனை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வெளியிட்ட கருத்தை, நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார மறுத்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது ஊடக சந்திப்பில் பேசிய வோல்கர்,

தன்பாலினத் திருமணங்களைக் குற்றமற்றதாக அறிவிக்கும் ஒரு யோசனை தற்போது இலங்கை பாராளுமன்றத்தில் உள்ளது என்றும், அதைப் பரிசீலிக்கும் நிலையில் இருப்பதாகவும் கூறியிருந்தார்.

தாம் அதனை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஐ.நா மனித வுரிமை ஆணையாளரின் குறித்த கருத்தை முற்றாக மறுத்துள்ள நீதியமைச்சர் ஹர்சன, பாராளுமன்றத்தில் இதுவரை அவ்வாறான எந்தவொரு சட்டமோ யோசனையோ சமர்ப்பிக்கப்படவில்லை. இது குறித்து எதுவித தீர்மானமும் நாம் எட்டவில்லை எனத் தெரிவித்தார். (ந-7)

யாழ். மாவட்டத்தில் 3 வலயங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வலயங்களும் வடக்கின் ஏனைய 3 மாவட்டங்களில் தலா ஒரு வலயங்களுமாக 8 வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இணைக்கும் கொக்கிளாய் பாலமும் முன்மொழிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியால் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, தொழில்நுட்பம் ஆகிய 4 விடயப் பரப்புக்களின் கீழ் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தின் முதற்கட்ட செயற்படுத்தலுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் தங்களது மேலதிக தேவைப்படுத்தல்களையும் முன்வைத்தனர்.

எதிர்காலத்தில் உலக வங்கியால் அவற்றை கவனத்திலெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர். உலக வங்கியின் செயற்றிட்டத்தை தொய்வின்றி விரைவாக செயற்படுத்துவதற்காக இணைப்புக்குழுவொன்றும் முன்மொழியப்பட்டது. அந்தக் குழு அடுத்தகட்ட நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பது என்று இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ந-7)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திருமதி தமிழ்ச்செல்வி சண்முகானந்தம்
அவர்களின் அன்புத் தந்தை

இராமலிங்கம் கந்தசாமி



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் 28.08.1942 மறைவு 29.06.2025

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ ஏழாலை மகா வித்தியாலயம்

(C-3298)



# சிவபூமி பாடசாலை



மெய்வல்லுனர் போட்டி - 2025

காலம் : 30.06.2025 திங்கட்கிழமை
பிற்பகல் 02.30 மணி
இடம் : பாடசாலை மைதானம், கோண்டாவில்

தலைமை
கலாநிதி. ஆறு. திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
செல்வி. இராதை அருளம்பலம்
(உடற்கல்வி போதனாசிரியர் - உடற்கல்வி அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு.திருமதி. கு.பரமேஸ்வரன் தம்பதிகள்
(கனடா)

திருமதி. கலைவாணி குகதாசன்
(இளைப்பாறிய அதிபர் - சிவபூமி பாடசாலை)

கௌரவ விருந்தினர்
திருமதி. பாகீரதி கணேசதுரை
(உளவள ஆலோசகர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை

(C-3299)


## சிறுவர்களின்...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாம் நாள் அகழ்வுகள் கடந்த 26 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், மயான எரியூட்டல் உள்ளிட்ட பல்வேறு அசௌகரியங்களைக் கடந்து நான்காவது நாளாக நேற்றும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதுவரை காலமும் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளுக்கு அருகில் எதுவித ஆடைகளோ பொருட்களோ மீட்கப்பட்டிருக்காத நிலையிலேயே நேற்றைய அகழ்வின்போது புத்தகப்பை உள்ளிட்ட இதர பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த நீலநிறப் புத்தகப்பையானது யுத்தப் பேரிடர் காலத்தில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நலன்சார் அமைப்பான யுனிசெப் நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

நேற்றுடன் 33 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 22 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

மேலும் மனிதப்புதைகுழிகளாக இருக்கக்கூடும் என ஊகிக்கப்பட்ட இடங்கள் செய்மதி மற்றும் ட்ரோன் கருவிகளது துணையுடன் அடையாளம் காணப்பட்டு அது தொடர்பான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அந்த இடங்கள் நீதிமன்ற உத்தரவிற்கமைய துப்பரவு செய்யப்பட்டுள்ளது. இனிவரும் நாட்களில் அப் பகுதிகளில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை அகழ்வுப் பணிக்கான செலவீனம் பகுதி டாக 12 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கு அண்மித்த ஒரு தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகழ்வுப்பணிகள் யாவும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா அவர்களது நேரடிக் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவ தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

காணாமலாக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் சட்டத்தரணி நிரஞ்சன், சட்டமருத்துவ அதிகாரி பிரணவன் உள்ளிட்ட தரப்பினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி இருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## வடக்கு...

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, இ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது உலக வங்கியால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளின் தொடர் நடவடிக்கைக்காக இணைப்புக்குழுவொன்று கலந்துரையாடலில் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன் உலக வங்கியால் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வலயங்களாக

## செம்மணி...

நீதிமன்றத்துக்கு செய்யப்பட்டிருந்தது. இந்த விண்ணப்பத்துக்கு நீதிமன்றம் முறையான அனுமதிகளை வழங்கியதைத் தொடர்ந்தே, மண் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக கொழும்பிலிருந்து குறித்த குழு வருகை தந்து பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதைவிட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் பீட பேராசிரியர்களும் கார்பன் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் செய்மதிப் படங்கள் மூலமும், ட்ரோன் மூலமும் மேற்கொண்ட ஆய்விலும் தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதிக்கு அருகாகவும் புதைகுழிகள் இருக்கலாம் என்று அகழ்வுப் பணிகளை முன்னெடுத்துவரும் பேராசிரியர் ராஜ் சோமதேவ சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

இந்த விடயமும் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்தப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இதனால் அகழ்வுப் பணிகள் விரிவாக வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகின்றது. (ந-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார், நெடுந்தீவு உட்பட ஐந்து இடங்களில்
# அணுசக்தி கதிர்வீச்சுக்களை கண்காணிக்கும் கட்டமைப்பு

(கொழும்பு)

**அணுசக்தி விபத்தின் போது நாட்டிற்கு ஏற்படும் கதிர்வீச்சு விளைவுகளை கண்காணிக்கக்கூடிய முன்கூட்டிய எச்சரிக்கை கட்டமைப்பை ஸ்தாபிக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.**



அணுசக்தி முகவர் நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள கடற்படை முகாம்களை கேந்திரமாக கொண்டு 5 இடங்களில் இந்த அமைப்புகள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்கப் பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்தார்.

குறித்த கட்டமைப்பின் ஊடாக நாட்டிற்கு அருகிலுள்ள நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களில் ஏற்படும் இயற்கையான அல்லது செயற்கை விபத்துகளின் போது நாட்டிற்குள் வரும் கதிர்வீச்சை அவதானிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி, மன்னார், நெடுந்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இந்த கட்டமைப்புகள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்கப் பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்தார். (நி)

## ஜனாதிபதி மாலைதீவு விஜயம்?

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஜூலை மாத இறுதி வாரத்தில் மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது பதவியேற்றதிலிருந்து அவரது ஆறாவது வெளிநாட்டுப் பயணமாகும்.

ஜூலை 29 ஆம் திகதி இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை நினைவுகூரும் நிகழ்விலும், ஜூலை 26 ஆம் திகதி மாலைதீவின் சுதந்திரதின கொண்டாட்டங்களைத் தொடர்ந்தும் இந்த விஜயம் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், ஜனாதிபதி அலுவலகம் இந்த விஜயத்தை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. (நி)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு புதிய தலைவர்

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக வைத்தியர் சஞ்சீவ தென்னகோன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற, அந்த சங்கத்தின் வருடாந்தத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று அவர் தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

அதேநேரம், செயலாளராக வைத்தியர் பிரபாத் சுகததாசவும் மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

அவர்கள் இருவரும் 60 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று குறித்த பதவிகளுக்குத் தெரிவாகியுள்ளனர். (நி)

## 22 பில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நெடுநாள் மீன்பிடி படகுகள் மூலம் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 1,758 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தால் 4 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இந்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 25 சந்தேக நபர்களையும் பணியகம் கைது செய்துள்ளது.

2025 ஆம் ஆண்டு இது வரையிலான காலப்பகுதி வரையில் கடல் வழியாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட போதைப்பொருளின் அளவு மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கையகப்படுத்திய ஹெரோயின் சுமார் 10.84 பில்லியன் ரூபாய் பெறுமதியுடையது என்றும், ஐஸ் போதைப்பொருள் சுமார் 12.16 பில்லியன் ரூபாய் பெறுமதியுடையது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## ஹெகெலிய மீது மேலும் ஒரு புதிய குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல்ல, தான் பயன்படுத்துவதாகக் கூறப்பட்ட, மெர்சிடிஸ் பென்ஸ் வாகனத்தின் வாடகைக்காக, பெருந்தொகை பணத்தை அமைச்சிலிருந்து பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மாதாந்தம் 2,40,000 ரூபாய்களை அவர் அமைச்சிலிருந்து பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, இது தொடர்பில் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

குறித்த வாடகை ஹெகெலிய ரம்புக்வெல்லவின் நண்பர்களில் ஒருவரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், சுகாதார அமைச்சின் பதிவுகளின்படி, அவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் பென்ஸ் ரக சிற்றூந்து ஒருபோதும் சுகாதார அமைச்சு வளாகத்திற்கு வரவில்லை என் பதும் விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே ஹெகெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. (நி)

## காணாமற்போன மீனவர்களின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

களுத்துறை, பேருவளை, மொரகல்ல பகுதியில் மீன்பிடி படகு கவிழ்ந்ததில், காணாமல் போன இரண்டு மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. பெந்தோட்டை கடற்கரையில் மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மீனவர்கள் நேற்று காலை மீன்பிடிக்கச் சென்றிருந்த போது விபத்திற்கு முகம் கொடுத்திருந்துள்ளனர்.

இறந்தவர்கள் அளுத்கம பகுதியைச் சேர்ந்த நதுன் குமார மற்றும் அவரது சகோதரர் துமிந்த நதுன் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் காணாமல் போயிருந்த நிலையில், பிரதேசவாசிகள் படகுகள் மூலம் அவர்களைத் தேடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்காக 3 புதிய மத்திய நிலையங்கள்

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக 3 புதிய மத்திய நிலையங்களை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் அந்த மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பணிப் பாளர் நாயகம் சுஜித் கொத்தலாவல தெரிவித்தார்.

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களை அடையாளம் காண்பதற்காக நாடுமுழுவதும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் போதைப் பொருள் அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல் தடுக்க விழிப்புணர்வு திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சி.ஐ.டி பணிப்பாளராக ஷானி அபேசேகர



(கொழும்பு)

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை நியமிப்பதற்கு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய விடுத்த கோரிக்கைக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான கடிதம் பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என பொலிஸ் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர்; வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கம்




(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி.அபிஷாளினி 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.டிலக்ஸனா 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.நிருஷிகா 2.80 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் பெண்களுக்கான முப்பாய்தல் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.பபிஷாளினி 10.11 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வை.நிருஜா 9.56 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.ஆன்மேரி 9.53 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மிதுன்ராஜ் 46.40 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஷ்ராஜ் 45.92 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.சந்தோஸ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# கோலியின் ஒரு பதிவிற்கு இத்தனை கோடியா?




இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரரான விராட் கோலியை இன்ஸ்டாகிராமில் 274 மில்லியன் பேர் பின்தொடர்கின்றனர்.

இந்தநிலையில் அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிடும் ஒவ்வொரு பதிவிற்கும் எத்தனை கோடி ரூபாய் கிடைக்கும் என்பது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி அவர் இன்ஸ்டாகிராமில் எதையாவது பதிவிட்டால் அவருக்கு சுமார் 12 கோடி ரூபாய் (இந்திய ரூபாய்) வரையில் பணம் கிடைக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று , கிறிஸ்டியானோ ரொனால்டோ, இன்ஸ்டாகிராமில் ஒரு பதிவிட்டால் அவருக்கு சுமார் 40 கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் தொகை கிடைப்பதாகக் கூறப்படுகிறது. (3)

# வன்னியின் பெரும் சமர் சமநிலையில் நிறைவு




வன்னியின் பெரும் சமர் என்று அழைக்கப்படுகின்ற. கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கும் முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான 14 ஆவது வன்னியின் பெரும் சமர் நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில்நடைபெற்றது.

முதலாவது இனிங்சில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 171ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு முதலாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 183 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்தது. பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 40ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வருவதாக நடுவர் அறிவிக்க 14 ஆவது வன்னியின் பெரும் சமர் சமநிலையில் நிறைவடைந்தது.

இதுவரை நடைபெற்ற 14 போட்டிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் நான்கு போட்டியில் வெற்றி பெற்றிருப்பதுடன் ஒரு போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றிருக்கிறது. ஒன்பது போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்திருக்கிறது.

போட்டியின் ஆட்டநாயகனாக கிளிநொச்சி மகா வித்தியாலய. வீரர் கி.கிருஸ்ணமேனனும் ,சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் இ.விதுரனும், சகலதுறை வீரனாக கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் கி.கிருஸ்ணமேனனும், சிறந்த களத்தடுப்பாளராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியின் சு.டிலக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டார். (3-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காசாவுக்கு ஆதரவாக
# இஸ்ரேல் மீது ஏமன் தாக்குதல்!

**(ஏமன்)**
**இஸ்ரேல் - ஈரான் போரினைத் தொடர்ந்து தற்போது ஏமன் நாடும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.**

காசாவுக்கு ஆதரவாக இத்தாக்குதல் நடைபெறுகிறது.

இருப்பினும், ஏமன் செலுத்தும் ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் இடைமறித்து சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.



இஸ்ரேல் - ஈரான் போரின் போதும், ஈரானுக்கு ஆதரவு தெரிவித்த ஹவுத்தி அமைப்பு, செங்கடல் வழியாகச் செல்லும் அமெரிக்க சரக்கு மற்றும் போர்க் கப்பல்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் ஜூலை 3 ஆம் வாரத்தில் வெளியிடப்படும்

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு**

(கொழும்பு)

2024 (2025) இற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறு எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே. எஸ். இந்திகா குமாரி லியனகே மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று சமூக ஊடகங்களில் சமீப நாட்களாக பரவி வரும் பல்வேறு செய்திகள் தவறானவை என்றும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(2554)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9
Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

## ‘சீட் பெல்ட்’ சட்டத்தை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)




ஜூலை 1 முதல் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பேருந்து ஓட்டுநர்கள் சீட் பெல்ட் அணிவதை கட்டாயமாக்கும் சட்டத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பழைய பேருந்துகளில் சீட் பெல்ட் இல்லாததால், அவற்றை பொருத்துவதற்கு போதுமான நேரம் தேவைப்படும் என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பேருந்து ஓட்டுநர்கள் சீட் பெல்ட் அணிவதை கட்டாயமாக்கும் சட்டம் நாளைமுதல் அமுல்படுத்தப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணையம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஒடிசா கோவில் திருவிழாவில்
## கூட்ட நெரிசலில் சிக்கி மூவர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவின் ஒடிசா மாநிலத்திலுள்ள பூரி ஜெகநாதர் கோவிலின் தேர் திருவிழாவின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்துள்ளதோடு 10 பேர் காயம் அடைந்துள்ளனர்.

சுவாமி தரிசனம் செய்வதற்காக ஏராளமான பக்தர்கள் திரண்டவேளையில் கூட்ட நெரிசல் அதிகரித்ததையடுத்து இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நெரிசலில் சிக்கி இரு பெண்கள் உட்பட மூன்று பேர் மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர்.

அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார், தீயணைப்பு மற்றும் மீட்புப் படை வீரர்கள் பக்தர்கள் கூட்டத்தை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்துள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இராசிபலன்

30.06.2025
ஆனி 16, திங்கட்கிழமை
பஞ்சமி பிற்பகல் 1.02 மணிவரை
மகம் முற்பகல் 11.09 மணிவரை

சுப நேரம் 11.56-1.26 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை

சந்திராஷ்டமம் , உத்திராடம், திருவோணம்.

**வளவன்**

**மேஷம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், செல்வ நிலை உயரும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், செய்தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**ரிஷபம்:** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்,வழிபாடு முன்னேற்றம் தரும், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெற்செய்கையில் புதிய வகை நோய்த்தாக்கம்

## விவசாயிகள் பாதிப்பு

**(கண்டாவளை)**

**கிளிநொச்சி பூநகரி குடமுருட்டி குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் சந்து குத்தி நோயின் தாக்கமும் புதியவகையான பங்கசு நோயின் தாக்கமும் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் நெற்செய்கை பாதிக்கப்பட்டு இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற பூநகரி குடமுருட்டி குளத்தின் கீழ் இம்முறை 650 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச நெற்செய்கைகளில் ஒருவகை நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அதாவது குறித்த பயிர்கள் 85 தொடக்கம் 90 நாட்கள் வரை கடந்துள்ள நிலையில் தற்போது நெற்பயிர்களில் ஒருவகை நோய்த்தாக்கம் காணப்படுகிறது.

இதனால் நெற் கதிர்களில் காணப்படுகின்ற நெல் மணிகள் பதர்களாகவே காணப்படுகின்றன. இதனால் 10% விளைச்சல் கூட கிடைக்குமா என்ற சந்தேகம் இருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடன்களைப் பெற்றும் நகைகளை அடைவு வைத்தும் பெருந்தொகை நிதிகளை செலவிட்டு இப்போகப்பயிர் செய்கையினை மேற்கொண்டுள்ள போதும் இவ்வாறான நோய்த்தாக்கம் பெரும் இழப்புகளை ஏற்படுத்தி உள்ளதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற கிருமிநாசினி மற்றும் பங்கஸ் நாசினிகளால் எந்த விதமான பயன்பாடும் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த நோய் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்தும் இது தொடர்பான விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் கால நிலை மாற்றம், அதிகரித்த உரப்பாவனை என்பன இந் நோய்களுக்கான காரணிகளாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (8-315)





யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக மாரப்பன நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய காளிங்க ஜெயசிங்க கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவருடைய இடத்துக்கு கொழும்பில் பணியாற்றிவந்த மாரப்பன அண்மையில் நியமிக்கப்பட்டார்.

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு கர்மாரம்பக் கிரியைகள் ஆரம்பமாகி 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.


அத்துடன் மறுநாள் கும்பாபிஷேகம் அதனைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெற்று 19 ஆம் திகதி சனிக்கிழமை மண்டலாபிஷேக சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## பலாலி நாகதம்பிரானுக்கு பொங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி நாகதம்பிரான் ஆலயத்தை மக்கள் வழிபட 35 வருடங்களின் பின்னர் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ள நிலையில், ஆலயத்தின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றது.

ஆலய நிர்வாகத்தினர் மாத்திரம் சென்று வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 27 ஆம் திகதி முட்கம்பி வேலிகள் அனைத்தும் அகற்றப்பட்டு ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் செய்வதற்கும் எந்த நேரத்திலும் பொதுமக்கள் சென்று வரக்கூடிய வகையிலான சூழலும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 600 |
| தக்காளி | 350 | 350 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 250 |
| கோவா | 450 | 450 | 300 | 400 |
| கரட் | 400 | 450 | 400 | 500 |
| பூசணி | 140 | 160 | 120 | 200 |
| புடோல் | 150 | 120 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 150-350 | 150-350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 800 |
| வெண்டக்காய் | 120 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 400 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 400 | 250 | 250 |
| கறிமிளகாய் | 500 | 500 | 450 | 700 |
| முருங்கைக்காய் | 1100 | 1300 | 800 | 1000 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 25-80 | 30-80 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 220 | 80-160 | 150-200 |
| இராசவள்ளி | 100 | 700 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 500 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 180 | 200 | -- | 200 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எதிர் வரும் ஜுலை மாதம் 14 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு பரந்தளவில் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார். அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்கள் யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக கொழும்பிலிருந்து 100 இயந்திரங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

அத்துடன் அதை இயக்குவதற்கான ஆட்களும் அழைத்து வரப்படவுள்ளனர். யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இதனை முதற் கட்டமாகச் செயற்படுத்தவுள்ளோம் என்று குறிப்பிட்டார். (8)

# நாடக விழா

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாடக வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா 2025 நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன் கிழமையும் மாலை 6 மணிக்கு கல்லூரியின் துரைராஜா திறந்த வெளி அரங்கில் அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு நுண்கலைத்துறை நாடகப் பேராசிரியர் சி. ஜெயசங்கர், சிறப்பு விருந்தினர்களாக லண்டன் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த தர்மரட்ணம் ரவீந்திரமோகன், ஆறுமுக தாசன் திருமூலன் ஆகியோரும் பிரதம நடுவராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி உபபீடாதி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (3)

# கஞ்சாவுடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 250 கிலோ கேரளா கஞ்சாவுடன் மூவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் சுற்றுக்காவல் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருந்த வேளை சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த படகை வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன்போது படகில் 250 கிலோ கேரளா கஞ்சா காணப்பட்டதை அடுத்து, அதனை மீட்ட கடற்படையினர், படகில் இருந்த மூவரையும் கைது செய்ததுடன் படகையும் கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட கஞ்சா, கைப்பற்றப்பட்ட படகு, கைது செய்யப்பட்ட மூவரையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். (8-33)

# சமாதான நீதிவான்கள் சங்க புதிய நிர்வாகத் தெரிவு




(யாழ்ப்பாணம்)

இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் 29 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 22 ஆம் திகதி கொழும்பு 7 இல் உள்ள கெக்டெர் கொப்பேகடுவா விவசாய மற்றும் ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு, புதிய அங்கத்தவர்களுக்கான அங்கத்துவச் சான்றிதழ் வழங்கல், மற்றும் சங்கத்தின் செயற்பாடுகள் என்பன இடம்பெற்றன.

இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் புதிய தலைவராக கொட்டான்சேனையைச் சேர்ந்த தேசமானிய கலாநிதி அந்தோனி டெக்ஸ்டர் பெர்னாண்டோவும் செயலாளராக வாதுவையை சேர்ந்த தேசமானிய சம்பத் ரம்புகபோதவும் பொருளாளராக கல்கிசையை சேர்ந்த திருமதி நந்தினி விஜயரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் பொதுக் கூட்டத்தில் நாடளாவிய ரீதியிலிருந்து சுமார் 300 இற்கும் மேற்பட்ட சமாதான நீதிவான்கள் கலந்துகொண்டனர். (க-8)

# 'வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்' மன்னாரில் விழிப்புணர்வு நாடகம்



(மன்னார்)

மன்னார் உயிலங்குளத்தில் இயங்கும் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ATI) மாணவர்களின் ஏற்பாட்டில், "வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்" எனும் தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் நேற்று முன்தினம் மன்னார் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது வீதி விபத்துக்களுக்கான முக்கியமான காரணங்கள், அதன் தீவிர விளைவுகள் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்த நாடகம், பாடல்களை மாணவர்கள் நிகழ்த்தினர்கள்.

மேலும், வாகன ஓட்டுநர்கள் பாதுகாப்பு சாதனங்களை பயன்படுத்தும் முக்கியத்துவம், போக்குவரத்து விதி முறைகளை கடைப்பிடிக்கும் அவசியம் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களிடையே பொறுப்பான போக்குவரத்துப் பழக்கங்களை வளர்க்கும் நோக்கில் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்தது.

மேலும் உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களினால் மன்னார் பஜார் பகுதியில் சிரமதானப் பணியும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# Northern Uni இன் துணைவேந்தராக பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் நியமனம்!



இலங்கையின் புகழ்பூத்த உயிர் வேதியல் துறை பேராசிரியரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், கல்வியியலாளருமாகிய வசந்தி அரசரத்தினம் Northern Uni இன் துணைவேந்தராக 2025 ஜுன் 30 ஆம் திகதி முதல் பதவி ஏற்கிறார்.

இலங்கையின் உயர்கல்வித் துறையில் ஒரு சிறந்த கல்வியாளரும் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவருமான பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கல்விசார் சிறப்பு, அளப்பரிய நிர்வாகத்திறமை மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகிய தகைமைகளை உடையவர்.

அவரது நியமனம் Northern Uni யின் வளர்ச்சி, புதுமை மற்றும் மாற்றத்தின் ஒரு புதிய சகாப்தத்தை குறிக்கிறது. பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் 1981 இல் BSc (First Class) பட்டத்தினையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிர் வேதியியல் துறையில் 1989 இல் PhD பட்டத்தினையும் பெற்றுள்ளார். 1984 இல் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராகத் தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்து, பின்னர் விரிவுரையாளர், மூத்த விரிவுரையாளர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியராக பதவி உயர்வு பெற்று, 2005 இல் உயிர் வேதியியலின் மூத்த பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உயிர் வேதியல் துறையின் ஓய்வு நிலை சிரேஷ்ட பேராசிரியராகவும் முன்னை நாள் துணை வேந்தராகவும் பணியாற்றிய வசந்தி அரசரத்தினம் தனது பணிக்காலத்தில் விஞ்ஞான ஆய்வின் வளர்ச்சிக்கும் நிர்வாகத் துறையின் விருத்திக்கும் உள்ளடங்கிய கல்வி முறைமையின் சீரிய எழுச்சிக்கும்வித்திட்டுள்ளார். மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையின்வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றியுள்ளார். அவரது மேலாண்மை மிக்க தலைமைத்துவம் வடக்கு மாகாணத்தின் உயர் கல்வித் துறையை தேசிய ரீதியில் மிளிரச் செய்துள்ளதுடன் அவரையும் நாடறிந்த சிறந்த கல்விமானாகப் புகழ் பெறச் செய்துள்ளது.

Northern Uni இற்கு பேராசிரியர் வசந்தி அரசரத்தினத்தின் வருகை ஒரு புதிய அத்தியாயத்தின் வெற்றிகரமான ஆரம்பமாகவும் புதுமையும் மாற்றமும் நிறைந்த கல்வி மேம்பாட்டின் ஆழமான அஸ்திவாரமாகவும் விளங்குகிறது. மேலும் அவரது வருகை நிறுவனத்தின் கல்வி சார் அர்ப்பணிப்புக்கும் திறமைமிகு பட்டதாரிகளை உருவாக்குவதில் Northern Uni இன் தன்னிகரற்ற ஈடுபாட்டுக்கும் எடுத்துக் காட்டாக உள்ளது.

**தலைவர் மற்றும்**
**Northern Uni சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இறந்தவர்களின் அஸ்திகளில் இடம்பெற்ற மோசடி

### குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இறந்தவர்களின் அஸ்திகளில் இடம்பெற்ற மோசடி குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி சுமார் 190 சடலங்களைப் பதுக்கி வைத்துவிட்டு, அவற்றை எரித்ததாக, போலி அஸ்தி கொடுத்து ஏமாற்றியவருக்கு, 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொலராடோ மாகாணத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இறுதிச் சடங்கு நடத்தும் நிலையத்தை நடத்தி வரும் ஜோன் ஹோல் போர்ட் என்பவருக்கு சொந்தமான ஒரு பாழடைந்த கட்டடத்தில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள், கடந்த 2023 இல் பொலிஸில் முறையிட்டிருந்தனர்.

இதையடுத்து பொலிஸார் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, சுமார் 190 இறுதிச்சடங்குகளுக்கான உடல்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு சிதைந்த நிலையில் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இந்தநிலையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது, கொவிட் காலத்தின்போது, 2019 முதல் 2023 வரை, ஹால்போர்ட் மற்றும் அவருடைய மனைவி கேரி ஆகியோர் உயிரிழந்தவர்களின் உறவினர்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டு உடல்களை எரிக்காமல் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.

அத்துடன், கொவிட்டில் உயிரிழந்தவர்களின் உடல்களை எரிப்பதற்காக, அரசிடம் இருந்தும் அவர்கள் பல மில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளனர் என்பதும் தெரியவந்தது.

அதேநேரம் உடல்களை எரித்ததாகக் கூறி உறவினர்களிடம் போலி அஸ்தியை வழங்கியிருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்குகளை விசாரித்த நீதிமன்றம், ஜோன் ஹோல் போர்டுக்கு, 20 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது. (நி)

# அடுத்த வார காசாவிலும் போ

## அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

**காசாவில் அடுத்த வாரத்திற்குள் போர்நி அமுலுக்கு வரும் என அமெரிக்க ஜன டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "காசாவில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அதனால் தான் அங்கு நிறைய பணம் வழங்கப்படுகிறது. காசாவில் உள்ள மக்கள் கடுமையான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர்" என்று கூறிய ட்ரம்ப், காசாவில் உணவைத் திருடியவர்கள் மோசமானவர்கள் என்றும், அங்கு உணவு விநியோகம் திறமையாக செய்யப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

முன்னதாக காசாவில் உள்ள மனிதாபிமான அறக்கட்டளைக்கு 30 மில்லியன் டொலர் உதவி வழங்க அமெரிக்கா முடிவு செய்திருந்தது.

இதற்கிடையே இஸ்ரேலிய அமைச்சர் ரான் டெர்மர் அடுத்த வாரம் அமெரிக்காவிற்கு பயணம் செய்கிறார். இந்தச் சந்திப்பின் போது காசாவில் போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படு

# பேருந்து-லொறி நேருக்கு நேர் மோதி விபத்து!

- ❖19 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு
- ❖மூவர் படுகாயம்
- ❖எகிப்தில் துயரம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் மினொபியா மாகாணத்தில் உள்ள அர்ப் அல் சன்பாசா கிராமத்தில் 22 தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று அஸ்மொன் என்ற பகுதியில் எதிரே வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 19பேர் உயிரிழந்துள்ளதுடன் 3பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் நீண்ட நேரம் போராடி மீட்புப் பணி மேற்கொண்டனர்.

குறித்த விபத்தில், சம்பவ இடத்திலேயே 19 பேர் பரிதாபமாக உயிரிழந்ததுடன் மேலும் 3 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் விமானங்களை வாங்கும் இங்கிலாந்து

(லண்டன்)

தந்திரோபாய அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன் கொண்ட F-35A போர் விமானங்களை வாங்க இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது.

இது "ஒரு தலைமுறையில் இங்கிலாந்தின் அணுசக்தி நிலைப்பாட்டை மிகப் பெரிய அளவில் வலுப்படுத்துவதாக" அமையும் என இங்கிலாந்தின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பனிப்போர் முடிவடைந்த பின்னர் முதல் முறையாக இங்கிலாந்தின் விமானப் படை அணு ஆயுதங்களை ஏந்திச் செல்ல அனுமதிக்கும். இந்த கொள்முதல் குறித்து ஸ்டார்மர் கடந்த புதன்கிழமை ஹேக்கில் நடைபெற்ற நேட்டோ உச்சிமாநாட்டில் இது குறித்து கலந்துரையாடியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)



# உக்ரைனுடன் பேச்சுவா ரஷ்ய ஜனாதிபதி

(மொஸ்கோ)



உக்ரைன்- ரஷ்யா இடையில் அமைதி ஏற்படுத்துவதற்கான முதற்கட்ட நேரடி அமைதிப் பேச்சுவார்த்தை துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது. இதில் இருநாட்டு அதிகாரிகளும் நேருக்குநேர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

2 மணி நேரத்திற்கும் குறைவாக நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கிய முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை. இரு நாடுகளும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகளை பரிமாற்றிக் கொள்ள ஏற்றுக்கொண்டன.

இதனைத் தொடர்ந்து கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது.

பேச்சுவார்த்தைக்கு இடையிலும் உக்ரைன் - ரஷ்யா மோதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரத்திற்குள் போர் நிறுத்தம்

## ...த் உறுதி

...நிறுத்தம்
...னாதிபதி




...கிறது. ரான் டெர்மர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வின் நம்பிக்கைக்குரியவர் ஆவார்.

நேற்று முன்தினம் காசாவின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரே...லிய தாக்குதல்களில் குறைந்தது 62 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இதில் 10 பேர் உதவி விநியோக நிலையத்தில் உணவுக்காக காத்திருந்தவர்கள் என்று காசா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொது இடங்களில் புகைப் பிடிப்பதற்கு தடை

## பிரான்ஸ் அரசாங்கம் அறிவிப்பு




(பாரிஸ்)

கடற்கரைகள், பூங்காக்கள், பொதுத் தோட்டங்கள் மற்றும் பேருந்து நிறுத்துமிடங்களில் புகைபிடிப்பது தடை செய்யப்படுவதாக பிரான்ஸ் அரசாங்கம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை அரசாங்கத்தின் அதிகாரபூர்வ வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இந்த ஆணை, நூலகங்கள், நீச்சல் குளங்கள் மற்றும் பள்ளிகளுக்கு வெளியே புகைபிடிப்பதையும் தடை செய்யும்.

மேலும் இந்த நடவடிக்கை சிறுவர்களைப் புகைபிடிப்பிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வெளியான வர்த்தமானியில் மின்னணு சிகரெட்டுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தடையை மீறுபவர்களுக்கு €135 (US$ 158) அபராதம் விதிக்கப்படும்.

பிரான்சில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 75,000 பேர் புகையிலை தொடர்பான சிக்கல்களால் இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (நி)




# ...வார்த்தை நடத்த தயார் ...புடின் அறிவிப்பு



...தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 3 ஆண்டுகளை கடந்து போர் நீடித்து வரும் நிலையில் உக்ரைனுடன் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

போரில் கொல்லப்பட்ட மூவாயிரத்திற்கும் அதிகமான உக்ரைன் இராணுவ வீரர்களின் உடல்களை ஒப்படைக்கவும் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பட்டும் திருந்தாத பாகிஸ்தான்

# பயங்கரவாதிகளின் முகாம்களை மீண்டும் கட்டமைக்கும் பாகிஸ்தான்

## அதிருப்தியில் உலக நாடுகள்

(இஸ்லாமாபாத்)

ஆப்ரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தாக்கி அழிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் முகாம்களைப் பாகிஸ்தான் அரசு மீண்டும் கட்டமைக்கத் தொடங்கியிருப்பது உலக நாடுகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பயங்கரவாதிகள் முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களைத் தாக்கி அழித்த இந்திய இராணுவம், 100 பயங்கரவாதிகளைக் கொன்று குவித்தது.

இந்தத் தாக்குதலில், விமானக் கடத்தல், புல்வாமா வெடிகுண்டு தாக்குதல் போன்ற பயங்கரவாத சம்பவங்களுக்கு முக்கிய மூளையாகச் செயற்பட்ட யூசுப் அசார், அப்துல் ரவூப், முதாசிர் அகமது ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்திய எல்லைகள் மீது ட்ரோன் தாக்குதலை பாகிஸ்தான் நடத்தியது. இதனை இந்திய இராணுவம் வெற்றிகரமாக முறியடித்தது. மேலும் பாகிஸ்தானுக்குள் நுழைந்து அந்நாட்டின் விமானப்படைத் தளங்களை இந்திய விமானப் படை சேதப்படுத்தியது.

பயங்கரவாத முகாம்களைத் தவிர, பாகிஸ்தான் அரசின் வேறு எந்தக் கட்டமைப்பையும் நாம் தாக்கவில்லை என்று இந்திய இராணுவம் கூறியுள்ளது.

அதுமட்டுமில்லாமல், இந்த ஆபரேஷனின் போது தாக்கி அழிக்கப்பட்ட பயங்கரவாத முகாம்களின் செயற்கைகோள் படங்களை இராணுவம் வெளியிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதையும், பயங்கரவாத செயல்களைப் பாகிஸ்தான் ஊக்குவிப்பதாக உலக நாடுகளிடையே இந்தியா எடுத்துரைத்து வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தாக்கி அழிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம்கள், ஆயுத ஏவுதளங்களைப் பாகிஸ்தான் அரசு மீண்டும் கட்டமைக்க தொடங்கி இருப்பது உலக நாடுகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் மற்றும் அந்நாட்டின் உளவுத்துறையும் இணைந்து இந்தப் பயங்கரவாத உள் கட்டமைப்புகளை மீண்டும் உருவாக்கும் பணியை மேற்கொண்டு வருவதாக உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டார் அமைச்சர்-பிரதி அமைச்சர் விசேட கலந்துரையாடல்




(கொழும்பு)

வெளிவிவகாரத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மற்றும் கட்டார் வெளி விவகாரத்துறை அமைச்சர் சுல் தான் பின் சாத் அல் முரைக்கி ஆகியோருக்கிடையில் திறந்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன்போது, அல் உதெய்த் விமானப்படை தளத்தின் மீதான சமீபத்திய தாக்குதல் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் மேலும் அதற்காக இலங்கை சார்பில் வருத்தங்களையும் அமைச்சர் தெரி வித்தார்.

கட்டார் அரசுக்கும் அதன் மக்களுக்கும் விரைவில் அமைதியான சூழல் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும், இது போன்ற காலங்களில் இலங்கை அதன் நட்பு நாடான கட்டார் அரசுக்கு ஆதரவாக நிற்கிறது என்றும் தெரிவித்தார். ஏற்கனவே 134,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கட்டாரில் வசித்து வருகின்றனர், மேலும் அவர் களின் பாதுகாப்பு மற்றும் கண்ணி யத்திற்காக கட்டார் அரசு வழங்கும் அக்கறைக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கப் பட்டது. இதேவேளை, பிராந்தியத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் கட்டார் அரசின் அர்ப்பணிப்புக்கு சிறப்பு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் அமைதியின் அடிப்படையில் இந்த கூட்டாண்மையை மேலும் வலுப் படுத்த இலங்கை உறுதிபூண்டுள்ளதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மேலும் தெரிவித்தார்.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1994- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>1 இல் செவ்<br>உயரம் : 5'7"<br>தகைமை/ தொழில்: A/L,அமெரிக்கா<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15736 | பிறப்பு-2000- RC<br>நட்சத்திரம்: கேட்டை<br>4 இல் சூரி செவ்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15747 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி-பா-18 1/2<br>உயரம் :5'9"<br>தகைமை/தொழில்- A/L, Supervisor (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15737 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்- பரணி<br>2இல் சூரி செவ்<br>கி-பா- 7 1/2<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: BA,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15752 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>10 இல் சூரி செவ்<br>கி-பா-3 1/2<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்:BSC, Manager<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15738 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-விசாகம்<br>கி.பா -29<br>உயரம் -5'5"<br>தகைமை/தொழில்: Engineer,அமெரிக்கா<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15754 |
| பிறப்பு: 1994 - இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி-பா: 16<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்-O/L, சாரதி<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15743 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>7 இல் செவ்<br>கி.பா - 44 1/4<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில் -HNDA, MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15755 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம் :மூலம்<br>2 இல் செவ்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: BSc,IT work<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15744 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 2 இல் செவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில் -HNDIT,Business Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்,<br>தொ.இ: G/15758 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் (405)

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நல்லாசிரியர்

என்னுடன் படித்த ஒருவர் இப்பொழுது ஒரு பாடசாலைக்கு வாத்தியாராக இருக்கிறார். மாணவர்களிடம் அவருக்கு மிகவும் நல்ல பெயர் எந்த மாணவனைக் கூப்பிட்டுக் கேட்டாலும் "எங்கள் ஆசிரியர் மிகவும் நல்லவர் சேர்!" என்று தான் சொல்லுவான்.

இந்தக் காலத்து பிள்ளைகளிடம் இருந்து அவராலே எப்படி அப்படி ஒரு நல்ல பெயர் வாங்க முடிந்தது? இது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஒருநாள் அவரே எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். என்னுடைய சந்தேகத்தை அவரிடம் நேரடியாகக் கேட்டுவிட்டேன்.

"எல்லா மாணவர்களுமே ஒட்டு மொத்தமா உங்களை மிகவும் நல்ல ஆசிரியர் என்று ஏற்றுக் கொள்கிறார்களே அது எப்படி?" என்று கேட்டேன். "அது ஒரு பெரிய ரகசியம்!" என்றார் அவர்.

"அது என்ன என்று என்னிடம் சொல்லக் கூடாதா..?" என்றேன்

சொன்னா நீங்க எல்லோரிடமும் தகவலாக சொல்லி விடுவீர்களே!" என்றார். எல்லோருக்கும் அது பிரயோஜனப்படுமே" என்றேன். அவர் கொஞ்சம் யோசித்தார். "சரி நான் அந்த ரகசியத்தைச் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் இன்றைக்கு எனக்கு என்று ஏதாவது ஒரு "தகவல்" சொல்ல வேண்டும் என்றார். "ஓ பேஷா" என்று சொல்லி ஆரம்பித்தேன்.

நல்லாசிரியருக்கு எடுத்துக்காட்டாக ஒரு பெரியவர் (மொரார்ஜி தேசாய்) சொன்ன உண்மைக்கதை இது. ஒரு ஊரிலே ஒரு ஆசிரியர் இருந்தார்.

அவர் ஒரு நாள் வகுப்பிலே பாடம் நடத்தி முடித்தார். முடித்ததும் பிள்ளைகள் எல்லோருக்கும் "ஹோம் வொர்க்" கொடுத்தார். (வீட்டுப் பாடம்!) எல்லோரும் நாளைக்கு வகுப்புக்கு வரும்போது இதைச் செய்து கொண்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

ஆசிரியர் சொன்ன பிரகாரமே மறுநாள் வகுப்புக்கு வரும்போது எல்லாரும் அந்தப் பாடத்தை செய்து முடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஒரே ஒரு மாணவன் மட்டும் அந்த ஹோம் வேர்க்கை செய்து கொண்டு வரவில்லை. ஏன் செய்து கொண்டு வரவில்லை என்று கேட்டார் ஆசிரியர்.

"என்னாலே முடியவில்லை அதுதான் செய்து கொண்டு வரவில்லை என்றான். அந்தப் பையன். வாத்தியார் உடனே அந்தப் பையனைப் பார்த்து "போய் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு வா" என்னார். பையன் பயந்துகொண்டே போனான் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு வந்தான் ஆசிரியரிடம் கொடுத்தான். அந்த ஆசிரியர் பிரம்பை வாங்கினார். அந்த மாணவனிடம் அதைத் திருப்பிக் கொடுத்தார். கொடுத்துவிட்டுச் சொன்னார்.

"நான் எல்லா மாணவர்களுக்கும் சரியாக கவனித்து சொல்லிக் கொடுத்திருக்கேன். ஆனால் உன்னை மாத்திரம் சரியாக கவனிக்காமல் விட்டிருக்கிறேன். அதனால் தப்பு என்னிலே தான். இந்த பிரம்பாலேயே என் கையிலே இரண்டு அடி கொடு!" என்னார். பையன் பயந்துவிட்டான். நான் எப்படி உங்களை அடிக்க முடியும்? என்றான். ஆசிரியர் விடவில்லை.

"நீ அப்படிச் செய்ய வில்லை என்றால் நான் செய்த தவறு எப்படி உன் ஞாபகத்துலே இருக்கும்?. ரெண்டு அடி குடு!" என்றார். கையை நீட்டினார். அந்த மாணவனிடம் கட்டாயப்படுத்தி அடியை வாங்கிக் கொண்டார். அந்தப் பையன் உடனே அந்த ஆசிரியர் காலிலே விழுந்தான். அழுதான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்.

அதன் பின்பு ஒருநாள் கூட அவன் ஹோம் வொர்க் செய்யாமல் வகுப்புக்கு வந்ததே இல்லை! இந்தத் "தகவலை" என்னிடம் வந்திருந்த ஆசிரியரிடம் சொல்லிவிட்டு.. ம் இப்ப சொல்லுங்க உங்கள் ரகசியத்தை! மாணவர்களிடம் எல்லாரிடமும் எப்படி நல்ல பேர் வாங்கினீங்க?" என்று கேட்டேன். அவர் மெதுவாக வாயைத் திறந்தார்.

"அது வந்து சேர்.. பொதுவாக ஆசிரியர்கள் கேள்வி கேட்டு மாணவர்கள் பதில் சொல்லுவார்கள்.. இல்லையா.. பதில் சரியா இல்லை என்றால் ஆசிரியருக்குக் கோபம் வரும். கேள்விக்குத் தகுந்த பதிலாக இருக்க வேண்டும். ஆனா நான் பதிலுக்குத் தகுந்த கேள்வியாக கேட்பேன் சார்!" என்றார் எனக்குப் புரியலே! "அது எப்படி" என்றேன்! அவர் விளக்கினார்.

என் வகுப்பிலே ஒரு பையன் எந்தக் கேள்வி கேட்டாலும் "தெரியாது"- "தெரியாது" என்றே பதில் சொல்லிக் கிட்டிருப்பான் சேர்! ஒரு நாள் திடீர் என்று "அதிகாரி" எங்க வகுப்புக்கு வந்துவிட்டார். அவர் சில சிறுவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் "கேள்வி கேளுங்க!" என்று என்னிடம் சொல்லி விட்டார். அவர் சுட்டிக்காட்டிய பிள்ளைகளில இவனும் ஒருத்தன். இவன் முழித்துக் கொண்டே எழுந்து நின்றான். எதைக் கேட்டாலும் "தெரியாது!" என்று தான் சொல்லப்போறான். அதிகாரி வேறு நிற்கிறார். என்ன செய்வது. நான் யோசிச்சேன். ஒரு கேள்வி கேட்டேன். "தெரியும் என்பதற்கு எதிர்ப்பதம் என்ன? என்று கேட்டேன். "தெரியாது!" என்றார். "ALL Right" என்றுவிட்டார். அதிகாரி இருந்தாலும் அவர் மனசுக்குள்ளே லேசா சந்தேகம்.

என்னைப் பார்த்தார். "அந்தப் பையனையே இன்னொரு கேள்வி கேளுங்க" என்றார். நான் யோசிச்சேன். "ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா?" என்று கேட்டேன். அவன் உடனே "தெரியாது!" என்றான். அதிகாரி பார்த்தார் Very Good" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். அதிலேயிருந்து எல்லா பசங்களுக்கும் எம்மிலே ஒரு தனி மரியாதை சேர்! என்று " விளக்கம் கொடுத்தார் அந்த ஆசிரியர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ரயில் நிலையங்கள்
## நவீன மயமாக்கும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதில் பெரும் பங்காற்றும் பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள கட்டமைப்பிற்குள் சீர்திருத்தங்களை மேற்கொள்வதை விட, நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் ஆரம்ப விழா ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ் வாறு தெரிவித்தார்.

இதேவேளை வீதிப் பாதுகாப்பு செயற்றிட்டத்தை போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத்குமநாயக்க, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், ரயில்வே பிரதம பொறியாளர் மற்றும் தனியார் துறையில் உள்ள பல முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்றனர். (நி)

## வயலுக்குள் பாய்ந்த பட்டா வாகனம்
# நூலிழையில் தப்பிய சாரதி



(கொழும்பு)

வவுனியாவிலிருந்து மூதூர் நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம், திருகோணமலை - அநுராதபுரம் பிரதான வீதியின் வெல்வேரி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தானது, நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அதன்போது, பாதையை விட்டு விலகிய வாகனம் மின்கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த சேதமடைந்துள்ளது.

அத்துடன், வாகனத்தில் இருந்த சாரதி சிறு காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வீரப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name-
Drypetes Sepiaria
Family-Putranjivaceae

ஒரு வகை சிறிய மரம். இந்த மரம் இலங்கையிலும். இந்தியாவிலும் காணப்படுகிறது. இது பருவக் காடுகள் மற்றும் புதர் நிலங்களில் வளரும். வீரப்பழமானது மனித வாழ்நாட்களில் ஒருமுறையாவது சாப்பிட வேண்டிய அரிய பழமாகும்.

இது ஆங்கிலத்தில் Hero Fruit என அழைக்கப்படுகிறது. வெப்ப மண்டல மரமாகும்.

இதன் பழங்கள் கருஞ்சிவப்பு நிறத்திலும், காய்ப் பருவம் பச்சை நிறத்திலும், முதிர்ந்த பழங்கள் செம்மஞ்சள் நிறத்திலும் சிறிய கோள வடிவத்திலும் இருக்கும்.

இதன் பழங்கள் கொத்துக் கொத்தாக காய்க்கும். உண்ணக் கூடிய புளிப்பும், இனிப்பும் கலந்த சுவையுடைய எமது கிராமத்துப் பழங்களாகும்.

கோடை காலத்தில் கிடைக்கக் கூடிய பழமாகும்.

மரம் நிறைய பழங்கள் கொத்துக் கொத்தாக காய்க்கும்.


தற்போது அருகி, அழிந்து வருகின்ற பழமாகும்.

அதிகளவு உயிர்ச்சத்து A, C அதிகளவில் காணப்படும்.

இதன் விதைகளும் மென்மையாக இருக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது. கோடை காலத்தில் தோலில் ஏற்படும் வறட்சியையும் நீக்கக்கூடியது. தோலை பளபளப்பாக வைத்திருக்க உதவும் . சருமத்திற்கு தேவையான ஈரப்பதத்தை தக்க வைக்க உதவும் எமது பிரதேசத்திற்குரிய பழமாகும். வட மாகாணக் காடுகளில் இம் மரங்களின் பரம்பல் அதிகம்.

எனவே பருவகாலங்களில் நிறைய பழங்களை சேகரித்து பயன்படுத்தலாம்.

கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்களில் வீரப்பழம் சிறந்ததாகும்.



சிறுநீரகக் கற்கள் உருவாவதையும் தடுக்கக்கூடியது இப் பழங்களாகும்.

இப் பழங்களில் காணப்படும் வேதியற் பொருளான Lycopene ஆனது எதிர் ஓட்சியேற்றத் தன்மையுடையது. இது தோல்களை பாதுகாக்கும் தன்மையுடையது.

இப் பழங்களில் அதிகமாக நீர்ச்சத்து காணப்படுவதால் சிறுநீரக கற்கள் உருவாவதை தடுக்கும் ஆற்றல் உண்டு. இப் பழங்களில் காணப்படும் பொட்டாசியம் சத்தானது இருதயத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் குருதி அமுக்கத்தை சீராக பேண உதவக் கூடியது.

இப் பழங்களில் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம்.

இப் பழங்களை அளவாகப் பயன்படுத்தினால் நீரிழிவு நோயாளிகளுக்கு சிறுநரீக பாதிப்பு ஏற்படுவதையும் தடுக்கக்கூடியது. இப் பழங்களில் காணப்படும் கரையக் கூடிய நார்ச்சத்தானது ஜீரண மண்டலத்தை சீராக பேண உதவும். வீரப்பழங்கள் அதிகளவு கிடைக்கும். பருவ காலங்களில் வீரப்பழப்பாணி காய்ச்சி வைத்து ரொட்டி, சப்பாத்தி போன்றவற்றிற்கு பூசிச் சாப்பிடலாம்.

சுவையானதாகவும் இருக்கும் இப் பழங்களில் காணப்படும் உயிர்சத்து A, C போன்ற எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து . உடலிலுள்ள கழிவுகளையும் அகற்றி ஆரோக்கியத்தை கொடுக்க கூடியது.

இதிலிருக்கும் உயிர்ச்சத்து C எமது முரசு கரைதல் போன்ற வற்றை நீக்கி பற்களின் சுகாதாரத்திற்கும் உதவக்கூடியது.

கண் பார்வையை மேம்படுத்தும் தன்மை இப் பழங்களில் காணப்படும். உயிர்ச்சத்து C இனால் கிடைக்கின்றது. இப் பழங்களில் இருந்து யூஸ் தயாரித்து காலை



மாலை அருந்தினால் சளித் தொல்லை நீங்கி உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை இவ் வீரப் பழங்களிற்கு உண்டு. பாலூட்டும் தாய்மார் இப் பழங்களை சாப்பிட்டால் தாய்ப்பால் சுரப்பை தூண்டக் கூடியது.

இப் பழங்களை வெயில் காலங்களில் சாப்பிட்டு வருபவர்களுக்கு அக்னி, அம்மை நோய்கள் வராமல் தடுக்கலாம்.

பொதுவாக எமது பிரதேசத்தில் கோடைக்காலங்களில் கிடைக்கும் பழங்களில் வீரப்பழம் முக்கிய பழமாகும். இப் பழங்களை வாயில் போட்டு சுவைத்து சாப்பிடும் போது வாய்ப்புண்கள் ஏற்படாமல் தடுக்கும் தன்மையும் உண்டு.

இப் பழங்கள் சாப்பிட்டுவர மலச்சிக்கல் ஏற்படமாட்டாது.

இப் பழங்கள் குறைந்த கலோரிகளுடன் அதிக நார்ச்சத்துள்ள பழமாகும். கொழுப்பு இதில் மிகக் குறைவு சோடியம் பொட்டாசியம், இரும்பு மற்றும் பல முக்கிய ஊட்டச்சத்துகள் இப் பழங்களில் காணப்படுகிறது. இப் பழங்களில் காணப்படும் இரும்புச் சத்தானது இரத்தச் சோகை ஏற்படாமல் தடுக்கக் கூடியது. ஆனி, ஆடி மாதங்களில் இப் பழங்களை நிறையப் பெற்றுக் கொள்ளலாம். வீரமரமானது எமது இலங்கைக்குரிய மரமாகும்.

பெரும்பாலும் முல்லைத்தீவுக் காடுகளில் வீரமரம் நிறைய உண்டு.

வட மாகாணக் காடுகளில் மரங்களின் கொப்புகளை வெட்டித்தான் வீரப் பழங்களை சேகரிப்பார்கள். எமது முன்னோர்கள் இப்படியான இயற்கை பழங்கள் உணவுகளை பயன்படுத்தியமையாலேயே நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ முடிந்தது. இப் பழங்களின் யூஸை அருந்தி வந்தால் பல்லீறுகளுக்கு உறுதி அளிக்கவும், தொண்டை வலியை போக்கவும் உதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 809





இந்த அறைக்குப் பக்கத்தில் உள்ள வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவைத் திறந்து காட்டினேன் அல்லவா? நேற்றுக் கண்ணாடி அந்தக் கதவுக்கு நேரே வைத்திருந்தது. ஆகையால் அந்தக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்திலிருந்து யாராவது எட்டிப் பார்ப்பார்களோ என்று தோன்றியது. அப்படி இருக்க முடியாது என்றும் எண்ணினேன். அந்நிய புருஷன் ஒருவன் அந்த வேட்டை மண்டபத்தில் எப்படி வந்திருக்க முடியும்? ஆயினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்த்தேன்.."

நந்தினி இதற்குள் ஆரவத்துடன் கேட்கத் தொடங்கியிருந்தாள். "வேட்டை மண்டபத்தில் அந்தத் திருடன் ஒளிந்திருந்தானா? அகப்பட்டுக் கொண்டானா?" என்று கேட்டாள்.

"என்ன அக்கா, அவரைத் 'திருடன்' என்கிறீர்களே?"

"திருடன் என்றால், நிஜத் திருடனா? உன் மனத்தைக் கவர்ந்த திருடனைச் சொன்னேன் அடி! அவன் வேட்டை மண்டபத்தில் இருந்தானா?"

"அதுதானே அதிசயம்! அவர் அங்கே இல்லை. அதற்குப் பதிலாக எங்கள் அரண்மனைப் பணியாள் இடும்பன்காரி அந்த அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய முகம் ஐயனார் கோவில் வாசலில் உள்ள காடுவெட்டிக் கருப்பன் முகம் மாதிரி இருக்கும். 'இங்கே வேறு யாராவது வந்ததுண்டா?' என்று கேட்டேன் 'இல்லை' என்று சாதித்து விட்டான்"

"அவன் பொய் சொல்லியிருப்பான் என்று கருதுகிறாயா?"

"அது என்னமோ எனக்கு தெரியாது ஆனால் இன்னொரு ஆள் அந்த மண்டபத்தில் ஒளிந்திருப்பதாகத் தோன்றியது. 'திருட்டுத் தானே வெளியாகட்டும்' என்று நான் இந்த அறைக்குத் திரும்பி வந்து விட்டேன்" "திருட்டு வெளியாயிற்றா?"

"கேளுங்கள்! நான் இந்த அறைக்குள் வந்து வேட்டை மண்டபத்துக்குள் ஏதாவது பேச்சுக் குரல் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பேச்சுக் குரல் கேட்டது! தடபுடலாக ஏதோ விழுகிற சத்தமும் கேட்டது. நான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே இந்தக் கதவு அசைந்தது. நான் விளக்கை மறைத்து வைத்து விட்டுக் காத்துக் கொண்டிருந்தேன். இந்தக் கதவிலேயே வட்டமான ஒரு சிறிய உட்கதவு இருக்கிறது. அதைத் திறந்து கொண்டு ஓர் உருவம் இங்கே வரப் பார்த்தது. 'அபயம் அபயம்! என்னைக் காப்பாற்று!' என்ற குரல் கேட்டது. குரலும் உருவமும் அவரைப் போல் தோன்றியபடியால் அவர் இந்த அறையில் வருவதற்கு உதவி செய்துவிட்டு விளக்கைத் தூண்டினேன் பார்த்தால் அவரே தான்!"

"மணிமேகலை! இது என்ன அதிசயமடி! விக்கிரமாதித்யன் கதையைப் போல அல்லவா இருக்கிறது?"

"இன்னும் கேளுங்கள்! நாலு மாதமாகக் கனவில் கண்டுவந்தவரை நேரில் பார்த்ததும் என் உள்ளம் பூரித்தது. உடம்பு சிலிர்த்தது. ஆனால் கள்ளக் கோபத்துடன் அவரிடம் பேசினேன். 'பெண்கள் வசிக்கும் அந்தப்புரத்தில் எப்படி அவர் திருட்டுத்தனமாகப் பிரவேசிக்கலாம்?' என்று கேட்டேன். அவரைக் கொல்லுவதற்காக யாரோ சிலர் துரத்திக் கொண்டு வருவதாகக் கூறினார். 'உயிருக்குப் பயந்தோடும் பயங்கொள்ளி' என்று பரிகசித்தேன். அதற்குத் தம்மிடம் ஆயுதம் இல்லை என்று சமாதானம் கூறினார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பள்ளியில் திருட்டு



(நேற்றைய தொடர்ச்சி)

ஏன் பயமாயிருக்கா? பாலு கேட்டவுடன் சே. சே. அதெல்லாம் இல்லை. அந்த நேரத்துக்கு எப்படி வீட்டை விட்டு வெளியே வருவது என்று யோசித்தேன்.

எப்படியாவது எழுந்து வர வேண்டும். பாலுவின் இருப்பிடம் ராமசாமி வீட்டைத் தாண்டி சிறிது தூரத்தில் இருந்தது. பாலு நான் உன் வீட்டுக்கு வந்து விடுகிறேன், நீ ரெடியா இரு என்றுவிட்டுப் போய் பார்த்துவிட்டு வரலாம்.

சரி என்று தலையாட்டினான் ராமசாமி.

இரவு தூங்கி விடாமல் மிகவும் கஷ்டப்பட்டு விழித்திருந்தான் ராமசாமி.

பாலு வந்தவுடன் கூப்பிடுவதாக சொல்லியிருந்தான். அதற்காக விழிப்புடன் காத்திருந்தான். அவன் வீட்டில் அனைவரும் உறங்கியிருந்தனர்.

ராமு,ராமு என்று கிசுகிசு வென பாலுவின் குரல் கேட்டது. சத்தம் காட்டாமல் எழுந்த ராமசாமி கதவைச் சத்தமில்லாமல் திறந்தான். வெளியே பாலு நின்றுகொண்டிருந்தான் கதவை அப்படியே சாத்தி வெளியே தாழ்ப்பாள் போட்ட [illegible] என்று நடந்துகிட்டே பேசலாம் வா..சொல்லிவிட்டு விறு விறுவென நடக்க ஆரம்பித்தான். ராமசாமி அவன் பின்னால் ஓடினான். பேசலாம் என்று சொன்னானே தவிர பேசவேயில்லை நடை அவர்கள் பள்ளியை நோக்கி அவ்வளவு வேகமாக இருந்தது.

இருவரும் பள்ளி காம்பவுண்ட் சுவர் அருகே நின்று எட்டிப் பார்த்தனர். உள்ளே இருளாய் இருந்தது. ஒன்றும் கண்ணுக்கு தெரியவில்லை. பாலு ராமசாமியிடம் அப்படியே காம்பவுண்டு தாண்டி உள்ளே பார்த்து விடுவோம். ராமசாமி வேண்டாம் கேட்டை திறந்து போகலாம் என்றான்.

வேண்டாம் கேட் திறக்கும்போது சத்தம் வரும் அப்ப உள்ளே யாராவது இருந்தா நமக்கு ஆபத்து என்றான். அதுவும் நல்ல யோசனையாகத்தான் பட்டது.

சத்தமில்லாமல் காம்பவுண்ட் ஏறி உள்ளே குதித்தனர். மெல்ல..மெல்ல கால் வைத்து அலுவலக கட்டடத்தை நோக்கி நடந்தனர். அவர்கள் இருவர் மனதும் பயத்தில் துடித்துக்கொண்டிருந்தது.

சரக்கென யாரோ நடக்கும் சத்தம் கேட்டவுடன் பாலுவும், ராமுவும் சட்டென ஓடி அங்கிருந்த தூண் ஒன்றில் மறைவில் நின்று சத்தம் வந்த திசையை பார்த்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்களே இருங்கள். – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# போதைப்பொருளை ஒழிக்க மக்கள் திரள வேண்டும்

எங்கள் தமிழர் நிர்வாகத்தில் இருக்கக் கூடிய ஒருபெரும் பிரச்சினை நாங்கள் ஒரு விடயத்தைக் கவனித்தால், மற்றையதைக் கைவிட்டு விடுவோம் அல்லது அதனை மறந்துவிடுவோம்.

உண்மையில் இஃது ஒரு சிறந்த நிர்வாகமாக இருக்க முடியாது.

ஆம், இப்போது எங்கள் வடபகுதியில் போதைப்பொருள் பாவனை என்பது உச்சத்தை தொட்டுள்ளது.

அதிலும் பாடசாலை மாணவர்களை நோக்கிய போதை வியாபாரம் விஸ்வரூபமெடுத்துள்ளது எனலாம்.

எனினும் நாம் அதுபற்றி கருசனையற்றவர்களாக இருக்கின்றோம்.

அதற்குக் காரணம் நாங்கள் இப்போது வேறொரு விடயத்தைப் பற்றிச் சிந்திப்பதாகும். ஆக, ஒரு விடயத்தைக் கதைத்தால் ஏனைய விடயங்களை நாம் கவனிக்காமல் அல்லது அது பற்றி அலட்டிக்கொள்ளாமல் விடுவதென்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஆபத்தாக அமையும்.

இதை நாம் கூறும்போது, அந்தந்த விடயங்களைக் கையாளுகின்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தமது பொறுப்பை இடைவிடாது தொடர்ந்து செய்தாக வேண்டும்.

அப்போதுதான் குறித்த விடயத்தை எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

இதை இன்னும் தெளிவுபடுத்துவதாக இருந்தால், டெங்குக் கட்டுப்பாட்டில் இறங்கிவிட்டால், உணவுச் சுகாதாரத்தைக் கைவிட்டு விடுவோம்.

அதுபோல பாடசாலை மாணவர்களின் போசாக்கு உணவு பற்றிய விழிப்புணர்வைச் செய்வோமாயின், மாணவர்கள் மத்தியில் வேகமெடுத்துள்ள போதைப்பொருள் பாவனையை மறந்துவிடுவோம்.

எனவேதான் ஒன்றுக்காக இன்னொன்றை நிறுத்தி வைப்பது ஒருபோதும் ஏற்புடையதன்று.

ஆம், இப்போது எங்கள் வடபகுதியில் போதைப் பொருள் வர்த்தகம் மீளெழுச்சி பெற்றுள்ளது. சிறிது காலம் அமிழ்ந்து கிடந்த போதைப்பொருள் விற்பனை மீண்டும் எழுச்சி பெறுவதன் காரணமாக, பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாடு மீளவும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

எனவே எமது தாயக மண்ணில் இருந்து போதைப்பொருளை முற்றாக ஒழிக்க வேண்டும்.

இதுவிடயத்தில் எங்கள் இளைஞர்கள், பொதுமக்கள் எழுச்சி கொள்வார்களாயின் எங்கள் தாயகத்திலிருந்து போதைப்பொருளை முற்றாக ஒழிக்க முடியும்.

ஆகவே எங்களின் உரிமைக்காக எங்கள் மக்கள் எவ்வாறு அணிதிரள்கின்றார்களோ அதுபோல, எங்கள் மத்தியில் உள்ள போதைப் பொருள் வியாபாரத்தை – பாவனையை முற்றாக இல்லாதொழிப்பதற்கும் ஒரே வழி பொது மக்கள் எழுச்சி கொள்வது தான்.

எனவே இது விடயத்தில் எந்தத் தாமதங்களும் இல்லாமல் போதைப்பொருளை ஒழித்து எங்கள் இளம் சந்ததியைக் காப்பாற்ற நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

# மீண்டும் மீண்டும் மீனவர் கைது தமிழக முதல்வர் அவசர கடிதம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 08 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வரவும் மீனவர்கள் பிரச்சினைகளைக் கையாள்வதில் இலங்கை அதிகாரிகளுடன் உரிய இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 08 மீனவர்களைக் கைது செய்துள்ளதுடன் IND-TN-10-MM-773 பதிவு எண் கொண்ட அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், படகுகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்தல் என்பன சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குப் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

எனவே கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்ய, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் உடனடியாகத் தலையிட வேண்டும்.

வருடாந்திர மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து மீன்பிடிப் பருவம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில் நமது மீனவர்கள் வாழ்வாதாரம் ஈட்டும் நம்பிக்கையுடன் மீன்பிடிக்கக் கடலுக்குத் திரும்பியுள்ளனர்.

அவர்கள் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில் கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதிசெய்ய இலங்கை அதிகாரிகளுடன் உரிய இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

# சிற்றூர்தி விபத்து நால்வர் படுகாயம்

குருநாகல் - நுவரெலியா பிரதான வீதி வழியாக பண்டாரவளைக்குப் பயணித்த சிற்றூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்த விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவின் பம்பரகலைப் பகுதியில் குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக வேகக்கட்டுப்பாட்டை இழந்த சிற்றூர்தி வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் கவிழ்ந்ததாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

# தனமல்விலப் பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(தனமல்வில)

தனமல்வில பொலிஸ் பிரிவின் உனகந்த பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பல்லேபெத்த மற்றும் பதுளைப் பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 32 வயதுடையவர்களாவர்.

கைது நடவடிக்கையின் போது புதையல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் போதைப்பொருட்களுடன் கைது

(களுத்துறை)

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட திறந்த பிடியாணை நிலுவையில் இருந்தபோதும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் களுத்துறை வடக்குப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கிலுள்ள பொன்சேகா வீதியில் களுத்துறை குற்றப்பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரின் உடைமையில் மொத்தம் 110 கிராம் 17 மில்லிகிராம் ஹெரோயின், 101 கிராம் 47 மில்லிகிராம் ஐஸ் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் இருந்து சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

39 வயதான சந்தேக நபருக்கு எதிராகக் களுத்துறை மேல் நீதிமன்றம் மற்றும் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள இரண்டு வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்தால் ஏற்கனவே திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

களுத்துறை குற்றப் பிரிவு பொலிஸார் சந்தேக நபர் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# 35 ஆண்டுகளின் பின் மாவைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

(மாவிட்டபுரம்)

சுமார் 35 ஆண்டுகளின் பின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகங்களுடன் மகோற்சவ பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி காலை 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நண்பகல் 12.06 மணியளவில் புதிதாக அமையப்பெற்ற கொடிமரத்தில் கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

ஆடி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு 25 தினங்கள் ஆலய மகோற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# விசேட பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

விசேட பாராளுமன்ற அமர்வு நாளாக, சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று (30) காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது.

2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவ சட்டத்தின் 11 ஆவது பிரிவின் படி ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 அல்லது அதற்கு முன்னர் அரசாங்கம் நிதி உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட வேண்டிய தேவையை நிறைவேற்றுவதற்காக இவ்வாறு பாராளுமன்றம் கூடவுள்ளதாகப் பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (ந-7)

# கற்பிட்டி கடற்கரையிலிருந்து பீடி இலைகள் மீட்பு

கற்பிட்டி பொலிஸ் பிரிவின் தலவில கடற்கரை பகுதியில் சோதனை மேற்கொண்ட போது, சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் மற்றும் இரண்டு படகுகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது 02 மீன்பிடிப் படகுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 350 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்தப் பீடி இலைகளைக் கொண்டு வந்த சந்தேக நபர்களைக் கைது செய்யப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொக்கன் எழுதும்

# மொசாட் 01

**இஸ்ரேல்-ஈரான் யுத்தம் மூன்றாம் உலகப் போருக்கான தொடக்கப் புள்ளியாகப் பார்க்கப்பட்டது.**

**ஈரானின் முக்கிய அணு விஞ்ஞானிகளை, இராணுவத் தளபதிகளை அடுத்தடுத்துப் படுகொலை செய்தது இஸ்ரேல்.**

**இத் தாக்குதலுக்கு இஸ்ரேலின் பலம் பொருந்திய உளவு அமைப்பான மொசாட் காரணம் என ஈரான் குற்றம் சாட்டியிருந்தது.**

**மொசாட் அமைப்பைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது பெயரை முஸ்லீம் பெயராக மாற்றி ஈரானுக்குள் நுழைந்து ஈரானின் முக்கிய தளபதிகள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்று கூடும் நிகழ்வுகளில் பங்குபற்றி அவர்களின் மனைவிகளுடன் பழக்கத்தை ஏற்படுத்தி அந்த நெருக்கத்தை மிகவும் நம்பிக்கையான உறவாக மாற்றி, ஈரானின் உச்ச பாதுகாப்பான, எவராலும் உட்செல்ல முடியாத பல இடங்களுக்குள் சர்வ சாதாரணமாக சென்று வரக்கூடிய நம்பிக்கைக் குரியவராக மாறினார்.**

**ஈரானின் முக்கிய அணு மின் நிலையங்கள் மீதான தாக்குதல் மற்றும் அணு விஞ்ஞானிகளின் படுகொலைகளுக்கு இப் பெண்ணே மூளையாகச் செயற்பட்டிருந்தார்.**

**இஸ்ரேலின் துல்லியமான தாக்குதல்களுக்கு காரணமானவர் குறித்த பெண் என ஈரான் அரசு அறியும் போது, அவர் ஈரானில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார்.**

**இந்நிலையில் இஸ்ரேலின் மிக முக்கியமான உளவு அமைப்பான மொசாட் தொடர்பில் வலம்புரி வாசகர்கள் அறியும் விதமாக சொக்கன் எழுதியதும் இத் தொடர் இங்கு பிரசுரமாகிறது.**

**(ஆ-ர்)**

### ரத்த ஒலிம்பிக்ஸ்

**1972** செப்ரெம்பர் 5. ஜேர்மனியின் ம்யூனிக் நகரம் ஒலிம்பிக்ஸ் பரபரப்பில் மூழ்கியிருந்தது. உலகப் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் சகலமும் அங்கே குவிந்திருந்தன.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கிற வீரர்கள், வீராங்கனைகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அதன் பெயர், "ஒலிம்பிக் கிராமம்".

அன்றைக்கு, அந்த ஒலிம்பிக் கிராமத்தில் ஏழெட்டு புதிய முகங்கள், அவ்வளவாகப் பாதுகாப்பு இல்லாத அதிகாலை நேரத்தில், சுவர் ஏறிக் குதித்து உள்ளே நுழைந்தார்கள். நேராக இஸ்ரேலிய வீரர்கள் தங்கியிருக்கும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

இப்போது, அவர்கள் கையில் துப்பாக்கிகள் முளைத்திருந்தன. முகத்தை முழுவதுமாக மறைக்கும்படி குரங்குத் தொப்பி அணிந்துகொண்டார்கள். நடையில் நிதானம். ஆனால் கண்கள் மட்டும் பரபரப்பாகச் சுற்றிலும் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தன.

அவர்கள் அந்த வீட்டின்முன்னே வந்து நின்றார்கள். திருட்டுச் சாவி போட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஒலிம்பிக் பதக்கக் கனவுகளோடு அசந்து தூங்கிக்கொண்டிருந்த இஸ்ரேல் வீரர்கள், இந்த திடீர்த் தாக்குதலைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கவில்லை. அடுத்த சில நிமிடங்களில் அந்த வீடு அவர்களுடைய கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

“நீங்கள் எல்லாம் யாரு? எங்களை எதுக்காகப் பிடித்து வைத்திருக்கிறீர்கள். கேள்வி கேட்டவர்களுக்கு அடி விழுந்தது. வந்தவர்களை எதிர்க்க முயன்றவர்கள் ஈவு இரக்கமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரேலிய வீரர்களுக்குத் தூக்கம் முழுவதுமாகக் கலைந்துவிட்டது. கண்முன்னே நண்பர்கள் செத்து விழுவதைப் பார்த்தபிறகு யாரால் தூங்கமுடியும்?

அடுத்த சில நிமிடங்களில், ம்யூனிக் விவகாரம் உலகம் முழுக்க அலறியது: ஒலிம்பிக் கிராமத்தில் தீவிரவாதிகள் புகுந்துவிட்டார்கள். இஸ்ரேல் வீரர்கள் ஒன்பது பேரைப் பணயமாகப் பிடித்து வைத்திருக்கிறார்கள்!

யார் அவர்கள்? அப்பாவி விளையாட்டு வீரர்களைப் பிடித்துவைத்து என்ன செய்யப் போகிறார்கள். இந்த அதிரடிக் கடத்தலைத் திட்டமிட்டு நிறைவேற்றிய குழுவின் பெயர், "பிளாக் செப்ரெம்பர்". பாலஸ் தீன விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த பல்வேறு அமைப்புகளில் இதுவும் ஒன்று.



"ஏம்ப்பா, உங்க இஸ்ரேல் பாலஸ்தீனச் சண்டையையெல்லாம் ஊருக்கு வெளியே வெச்சுக்கக்கூடாதா? ஒலிம்பிக் கிராமத்தில உங்களுக்கு என்ன வேலை?"

“பிளாக் செப்டம்பர்“ குழுவினர் மிகவும் கவனமாக யோசித்தபிறகு தான் ம்யூனிக்கைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அந்த நேரத்தில் உலகத்தின் கவனம்முழுக்க ஒலிம்பிக்ஸில் குவிந்திருப்பதால், அங்கே ஒரு சின்ன குண்டூசி விழுந்தாலும்கூட, சத்தம் சர்வ தேச அளவில் கேட்கும்.

அவர்கள் நினைத்தது சரிதான். இஸ்ரேலிய வீரர்கள் பணயக் கைதிகளாகக் கட்டுப்பட்டு நிற்பதையும், முகமூடித் தொப்பி அணிந்த "பிளாக் செப்ரெம்பர்" போராளிகள் துப்பாக்கியும் கையுமாக உலா வருவதையும் உலகம் திகிலோடு பார்த்தது. ஜேர்மனிக் காவல்துறையும் இஸ்ரேல் அரசாங்கமும் செய்வதறியாது விழித்தன.

“இப்போது உங்களுக்கு என்ன தான் வேணும்? “இந்த ஒன்பது இஸ்ரேலிய வீரர்கள் உயிரோடு வேணும் என்றால் ஒரு நிபந்தனை “என்னது?” "இஸ்ரேல் ஜெயில்ல எங்களோட தோழர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இஸ்ரேல் பிரதமர் கோல்டா மெயர் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். "இது பச்சை பிளாக்மெயில், நாங்கள் இதற்கு ஒப்புக்கொண்டுவிட்டால், உலகத்தில் எந்த இஸ்ரேலியனும் நிம்மதியாக வாழமுடியாது" அப்படியானால், அந்த ஒன்பது இஸ்ரேல் வீரர்களின் கதி?

ம்யூனிக்கில் எத்தனை தீவிரவாதிகள் இருக்கிறார்கள்? ஏழு பேர்? எட்டு பேர்? அவர்களுக்குப் பயந்து இருநூற்றுச் சொச்ச கைதிகளை விடுதலை செய்யவேண்டுமா? நாமாக ஓர் அதிரடி நடவடிக்கையில் இறங்கி அந்த ஒன்பது விளையாட்டு வீரர்களையும் காப்பாற்றிவிடலாம் என்று முடிவெடுத்தது இஸ்ரேல்.

“சான்ஸே இல்லை” என்று பிடிவாதமாக மறுத்துவிட்டது ஜேர்மனி அரசாங்கம்."எங்க ஊர்ச் சட்டப்படி, வெளிநாட்டுக்காரர்கள் இங்கே வந்து துப்பாக்கி தூக்கக்கூடாது" "ஏன் சாமி, பிளாக் செப்ரெம்பர் போராளிங்கல்லாம் உங்க ஊர்லயே பிறந்து வளர்ந்த மண்ணின் மைந்தர்களா? அவங்க அங்கே ஆள் கடத்தல் செய்யும்போது நாங்க எதிர்த்துத் தாக்கினால் தப்பா?

இஸ்ரேல் எவ்வளவோ வற்புறுத்தியும் ஜேர்மனி தனது மனத்தை மாற்றிக்கொள்ளவில்லை, “முடிந்தால் அவங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி விடயத்தைச் சுமுகமாத் தீர்க்கப்பாருங்க, இல்லாட்டி, நாங்களே ஏதாவது அதிரடி செய்யறோம்“ "முதல்ல அதைச் செய்கிறோம் உங்களுக்குப் புண்ணியமாகப் போகும்“

ஒருபக்கம் ஜேர்மனி கமாண்டோக்கள் எதிர்த் தாக்குதல், மீட்பு நடவடிக்கைகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்க, இன்னொருபக்கம் "பிளாக் செப்டம்பர்" கடத்தல்காரர்கள் பொறுமை இழந்திருந்தார்கள். "என்னய்யா, எங்க ஆட்களை விடுதலை செய்வீர்களா? மாட்டீங்களா?பல மணி நேரங்களுக்குப்பிறகும், இந்தக் கேள்விக்குமட்டும் சரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் இஸ்ரேலிய வீரர்களைக் கூட்டிக்கொண்டு ஜேர்மனியிலிருந்து வெளியேறத் தீர்மானித்துவிட்டார்கள்.

"எங்களுக்கு ஒரு விமானம் வேணும், நாங்க எல்லாரும் இங்கிருந்து பத்திரமாக் கிளம்பிப் போறதுக்கு ஏற்பாடு செய்யுங்க அவர்கள் இப்படிக் கேட்டதும், ஜேர்மானியர்களுக்குத் தலைக்குமேல் பல்ப் எரிந்தது. விமான நிலையத்தில் வைத்து இந்தத் தீவிரவாதிகளை வளைத்துப் பிடித்து விடலாம் என்று தீர்மானித்தார்கள்.

கடத்தல்காரர்கள் கேட்டபடி, ஒரு தனி விமானத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. முகமூடிகளும் பணயக் கைதிகளும் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அதற்குள், அங்கே ஜேர்மனி அதிரடிப்படை வீரர்கள் தயாராகிக் காத்திருந்தார்கள். தீவிரவாதிகள் உள்ளே நுழைந்ததும் அவர்கள் எதிர்பாராத சமயத்தில் சுற்றி வளைத்துத் தாக்குவதாகத் திட்டம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு கவிழ்ந்து...

மேலும் தெரியவருவதாவது,

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதி காலை நாகர்கோவில் கடற்பகுதியில் படகுகளைக் கழுவிக் கொண்டிருந்த வேளை அலையின் சீற்றத்தில் சிக் குண்ட படகு மீனவருக்கு மேல் கவிழ்ந்ததில் பலத்த காயமடைந்த மீனவர் பருத்தித்துறை வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரி வில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

சம்பவம் தொடர்பாக மருதங் கேணிப் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ந-7,316)

## மேலதிக செய...

டுள்ளார்.

அண்மையில் இலங்கை நிர்வாக சேவை அதி சிறப்புத் தரத்தை மதுமதி பூர்த்தி செய்த நிலையில் நீதி அமைச் சின் மேலதிகச் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் உடுவில் பிரதேச செயலாளர், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என பல பதவிகளை வகித்த நிலையில் இவர் இறுதியாக வட மாகாண பிரதித் தபால்மா அதிப ராகக் கடமை வகித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்கவுள் ளார். (ந-7,104)

## யாழ்.மாநகர...

மாநகர சபையினர் தமது எல்லைக் குள் சேகரிக்கும் மருத்துவக் கழிவு, மலக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு, விலங் குக் கழிவு என்பன உள்ளிட்ட கழிவு களை மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கல்லுண்டாய் பகுதியில் கொட்டுவதால் அதனை நிறுத்தும்படி கோரி இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நேற்று யாழ்.மாநகர சபை கழிவுகளை ஏற்றிவந்த உழவு இயந்திரங்கள் வழிமறிக்கப்பட்டன. மலக்கழிவினை ஏற்றிவந்த மாநகர சபையின் வாகனம் ஒன்று உடனடி யாகத் திருப்பி அனுப்பப்பட்டது.

வழமையாகக் குறித்த பகுதிக்குள் கொட்டப்படும் கழிவுகளுக்குத் தீ வைக்கப்படுகிறது. இது குறித்து பல தடவைகள் நாம் முறையீடு செய் தோம்.

எனினும் நேற்று முன்தினம் தீ பரவிய நிலையில் அந்தத் தீ நேற்று வரை எரிவதால் வீதியில் போக்குவரத் தில் ஈடுபடும் பயணிகளுக்கும் அண் டிய சூழலில் வசிக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகப் போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ந-7,33,104)

## ஈஸ்டர் தாக்குதல்...

பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித் தார். ஈஸ்டர் தாக்குதல் விசாரணை குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் துரிதகதி யில் இடம்பெற்று வருகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும், சட்டமா அதிபர் திணைக்களத்தின ரும் கூட்டாகச் செயற்பட்டு வருகின்ற னர்.

பிரதான சூத்திரதாரி யார் என்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பல முக்கியமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. பிரதான சூத் திரதாரிகளை மட்டுமல்ல, அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை யும் நாங்கள் நீதியின் முன்பாக நிறுத்து வோம்.

கத்தோலிக்க மக்களின் கவலை களும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அதிருப்தி யும் நியாயமானவை. அவரின் கருத் துகளுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். எமக்கும் கால அவகாசம் அவசியம். எது எப்படி இருந்தாலும் நிச்சயம் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும் என்றார். (ந-7)

## எட்டு இந்திய...

றும் பறிமுதல் செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட கடற்தொழி லாளர்கள் தலைமன்னாருக்கு அழைத்து வரப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்தொழில் பரிசோதகர் காரியாலயத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்திய கடற்தொழி லாளர்களுக்கு அண்மையில் விதிக் கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் நிறைவடைந்ததன் பின்னர், இந்திய கடற்தொழிலாளர் கைது செய்யப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஷிரந்தி...

ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப் படவுள்ளதாக தென்னிலங்கை ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கலக்கமடைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ, சமீபத்தில் மல் வத்த பீடத்தின் மகாநாயக்கரைச் சந்தித்து, அத் தகைய நடவடிக் கையை எடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க விடம் வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்ட தாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எனினும், இத ற்குப் பதிலளித்த மல்வத்த மகா நாயக்கர் திப் போட்டு வாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், "கடந்த காலத் தில் ஊழல் செய் பவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய நாங்கள் எப்படி ஜனாதிபதி அநுர விடம் எப்படிச் சொல்லமுடியும்?" என்று கேட்டதாக வும் கூறப்படு கின்றது.

'சிரிலிய சவிய' கணக்குத் தொடர் பாக நடைபெற்று வரும் புதிய விசா ரணைகளின் அடிப்படையில், ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படும் சாத் தியம் காணப் படு வதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஷிரந்தியின் சகோதரரும் ஸ்ரீ லங்கன் ஏர் லைன்ஸ் நிறு வனத்தின் முன் னாள் தலைவரு மான நிஷாந்த விக்கிரமசிங்கவை இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அண்மையில் கைது செய்திருந் தமை குறிப்பிடத் தக்கது. (ந-7)

## இளைஞனின்...

மாதங்களாக ஊசி மூலம் போதை வஸ்தை உட்செலுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை உடல்நலக் குறைவு ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

மரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம குமார் விசாரணைகளை மேற்கொண் டார். (ந-7,104)


மஹஜன சம்பத
திகதி 2025.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 5875
Q 7 9 5 9 9 8
அத சம்பத
Q 5 9 9 8
சீட்டிழுப்பு இலக்கம் 0450
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1905
Q 33 43 55 80 Q
Double Chance 79791

மெகா பவர்
திகதி 29/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2223
Y 19 03 22 44 52

ஜய JAYA
திகதி 2025.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 0143
W 4 2 8 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4117
சீட்டிழுப்பு திகதி 29.06.2025
X 01 04 30 52
X

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 1184
மிதுனம் 22 25 28 29 மிதுனம்
10806 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
29.06.2025 வெற்றி வாரம் 583
C 4 2 6 8 3 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,213,498.80
68363
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2849
சீட்டிழுப்பு திகதி 2025.06.29 தினம் ஞாயிற்றுக்கிழமை
41 60 61 73 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,655,948.00

சனிதா
திகதி 29.06.2025 வெற்றி வாரம் 5010
15 19 20 57 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,777,385.60
85492

சசிரி
வெற்றி வாரம் 715
சீட்டிழுப்பு திகதி 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை
40 41 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4561
சீட்டிழுப்பு திகதி 29.06.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
29 36 46 51 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,495,855.20
138127

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 19 12 27 56 69
2025
29.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,067,418.20

அட கோடீபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2675
சீட்டிழுப்பு திகதி: 2025.06.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,275,636.80
11 36 63 68 T
331640


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியமைச்சின் செயலாளராக ஹர்ஷன

# மகிந்த, கோட்டா போலவே அநுரவும் செயற்படுகிறார்

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரியபெரும நிதியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தவறான தொரு எடுத்துக்காட்டு.அரச நிர்வாக சேவையிலும், இலங்கை மத்திய வங்கியிலும் இந்தப் பதவிக்கு தகுதியானவர்கள் எவரும் இல்லையா, மஹிந்த மற்றும் கோட்டாவை போன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசியல் நியமனங்களை வழங்கியுள்ளார் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கலாநிதி ஹர்ஷன சூரிய பெரும நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். அதே போல் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்நிலை பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார். இவ்விரு செயற்பாடுகளும் மிக மோசமான எடுத்துக்காட்டாகும்.

நாட்டின் நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதான பதவிகளை வகித்தவர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் அவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படுமாயின், சேவைக் காலத்தின் போது அவர்கள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு பாதிப்பு ஏற்படும்.

பிரதான அமைச்சுக்களான நிதி, வலுசக்தி மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மத்திய வங்கியின் ஆளுநர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் உள்ளிட்ட பதவிகளை வகித்தோருக்கு கவர்ச்சிகரமான ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் உயர் சலுகைகளை வழங்கி, அவர்கள் வெளிநாடுகளிலோ அல்லது தேசிய மட்டத்திலோ உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படு வதைத் தடுக்க வேண்டும். இதற்கான சட்டத்தை உருவாக்க வேண்டும்.

நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் பதவிக்கு நியமிக்கப்பட பரிந்துரைத்துள்ளமை தவறானதொரு எடுத்துக்காட்டு. அதே போன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரிய பெரும நிதியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை பிறிதொரு தவறான எடுத்துக்காட்டு.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி தொடர்பில் பாரதூரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பொருளாதார நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் இலங்கை வங்குரோத்து நிலையடைய போகிறது என்பதை முன்கூட்டியதாக அறிவிக்கவில்லை. ஜனாதிபதியின் வசம் தான் நிதியமைச்சு உள்ளது. தனக்கு இணக்கமானவரையே ஜனாதிபதி நிதியமைச்சின் செயலாளராக நியமிப்பார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வசம், பாதுகாப்பு மற்றும் நிதி பொருளாதார அமைச்சுக்கள் உள்ளன. இந்த அமைச்சில் 94 நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளன. இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை ஜனாதிபதியால் அமைச்சர் என்ற அடிப்படையில் கண்காணிக்கவோ அல்லது ஆராயவோ முடியாது. ஆகவே பூரணத்துவமிக்க வகையில் நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனவிரத்ன பதவி வகிக்கிறார்.இவர் தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் பிரச்சார மேடைகளில் இருந்தவர். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தின் போது இவர் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டார் என்றும், ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் நிதியமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசியல் நியமனங்களே வழங்கப்பட்டன.

இதனை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட மக்கள் விடுதலை முன்னணியினர் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் அவர்கள் இன்று அதனையே செய் கிறார்கள். நாட்டு மக்கள் இவ்வாறான அரசியல் நியமனங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றார்.(ந-7)


யாழ். மாவட்டத்தின் முதல்வராம்
பிரதீபனுக்கு வாழ்த்துகள்



யாழ். மாவட்டத்தின் முதல்வனாய்
பணி செய்யும் ஒருவனாய்
பார் போற்ற உயர்ந்து நிற்கும்
பிரதீபம்; எம் பிரதீபனை
மனதார வாழ்த்தி
உளமார வணங்கி நிற்கின்றோம்.

Best Wishes

மனதார வாழ்த்தி மகிழும்
இ.மன்மதராசன் குடும்பத்தினர்
"வெற்றி மஹால்",
ஊரெழு கிழக்கு, வளர்பிறை.
(C-3300)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3296)

076 825 7716 (ஆகாஸ்)



JMM EXPRESS
வெளிநாடுகளுக்கான துரித தபால்
பொதிகள் விநியோக சேவை

11 Kg மேலான பொதிகள்
7 – 10 நாட்களில்
டெலிவரி செய்யப்படும்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான
விசேட விலைச் சலுகை

UK - 1375 Canada - 2950
France - 1950 Australia - 2950

076 421 8654
Urumpirai East, Urumpirai, Jaffna.
(1278)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS
076 822 6241
076 822 6237
(C-3297)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



**வேலைவாய்ப்பு**

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு சமையல் உதவியாளர்கள் தேவை. (Kitchen Helpers)

தொடர்புகளுக்கு :
076 830 3931
(4652)

**வேலையாட்கள் தேவை**

சமையலறை உதவியாளர், டெலிவரி ரைடர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கு.
077 991 2628
(1277)

**வேலையாட்கள் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு சிற்றுண்டி தயாரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. (பெண்கள் விரும்பத்தக்கது)

070 664 7466
077 469 6695
(4676)

**உதவியாளர் தேவை**

யாழ் நகரிலுள்ள கிளினிக் ஒன்றிற்குப் பகுதி நேரமாகப் பணிபுரியத்தக்க பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு
077 375 4490
077 220 2769
(C-3295)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org